# தமிழ்பேசும் மக்கள் எந்த ஆட்சி அமைப்பை விரும்புகிறார்கள்?

Registered as a Newspaper in Ceylon ✶ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 316
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 10 ரம்ழான் 22 திங்கட்கிழமை (25-12-6]

## வாக்கெடுப்பு நடாத்தப்போவதாக 'சுந்தரர்' அறிவிப்பு

— நமது நிருபர் —

வவனியா, ஞாயிறு
ஒற்றை ஆட்சியா? சமஷ்டி முறையா? அல்லது தனித்தமிழ் ஆட்சியா?

இந்த மூன்றில் இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் எந்த ஆட்சி முறையை விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு பொதுசன வாக்கெடுப்பொன்றை ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியினர் விரைவில் நடாத்தப்போவதாக அதன் தலைவரும், முன்னாள் வவனியா எம். பி. யுமான திரு. ஸி. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வவனியா லிங்கம் தோட்

(6-ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறை பஸ் சேவை முற்றாக ஸ்தம்பிதம்

## இ. போ. ச. ஊழியர் திடீர் வேலைநிறுத்தம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், திங்கள்
பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த சுமார் 200 ஊழியர்கள் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் திடீர் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளதால் சில பகுதிகளில் பஸ் சேவை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. பருத்தித்துறை டிப்போவிலிருந்து யாழ்ப்பாணம் ஊடாகச் செல்லும் மன்னார் முல்லைத்தீவு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை அதிகமான பிரயாணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளையும், மற்றும் இ. போ. ச. உத்தியோகத்தர்களும் நேற்றுக்காலை பருத்தித்துறை டிப்போவிற்கு சென்று வேலைநிறுத்தத்தை தீர்த்துவைப்பதற்காக முயற்சி எடுத்தனர்.

நேற்று முன்தினமிரவு ஒரு பஸ்ஸில் ஏற்பட்ட கைகலப்பே இவ் வேலைநிறுத்தத்திற்குகாரணமெனக் கூறப்படுகிறது. அந்த பஸ்ஸில் வந்த ஒரு பிரயாணிக்கும், கண்டக்டருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பை தொடர்ந்து பொலிஸில் புகார் செய்யப்பட்டதாகவும், அப்பிரயாணி மீது நடவடிக்கை எடுக்கப்படாததால் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பெறியியலாளர், சாரதிகள், கண்டக்டர்கள், நேரஅறிவிப்பாளர் ஆகியோர் இவ்வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளார்கள் எனத்தெரியவருகிறது.

இவ் வேலைநிறுத்தத்தால் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும பல பஸ்சேவைகள்நேற்றுக்காலை நடைபெறவில்லை. உத்தியோகத்தர்கள், நோயாளிகள், வியாபாரிகள், பரீட்சைஎடுக்கும் மாணவர்கள் நீண்ட நேரம் பஸ் தரிப்பு நிலையங்களில் காத்திருந்தனர். சில தனிப்பட்ட வான்கள், கூடிய கட்டணம் அற

(6-ம் பக்கம் பார்க்க)

### ★ கடைசி செய்தி

## பஸ் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்
பருத்தித்துறை டிப்போ பஸ் ஊழியர்கள் நேற்று பிற்பகல் வேலைக்குத் திரும்பினர் என்றும் பருத்தித்துறை பஸ் சேவைகள் மீண்டும் வழக்கம் போல சேவையில்ஆரம்பித்துள்ளன என்றும் கடைசியாகக் கிடைத்த செய்தி கூறுகிறது.

பிராந்திய முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை பருத்தித்துறை டிப்போவிற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாக இவ் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

## வடமராட்சி தபால்பைகள் வானில் அனுப்பப்பட்டன

கொடிகாமம், திங்கள்
பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் வேலைநிறுத்தத்தால் நேற்றுக்காலையில் மெயில் ரயிலில் வந்த வடமராட்சி பிரயாணிகள் நீண்டநேரம் கொடிகாமத்தில் தங்கியிருந்தனர்.

தனிப்பட்ட வான்களில் சில பிரயாணிகள் கூடிய கட்டணம் கொடுத்து சென்றனர். வேறுசிலர் தனிப்பட்ட கார்களில் சென்றனர், சில பிரயாணிகள் லொறிகளில் சென்றனர்.

வருடமராட்சிக்கு வந்த தபால் பைகளை எடுத்துச் செல்ல பஸ் வராததால் கொடிகாமம் உப தபாற்கந்தோரில் அப்பைகள் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றுக்காலை சுமார் 9 மணிக்கு தபால் பகுதியை சேர்ந்த வான் வந்து வடமராட்சிக்கான தபால் பைகளை எடுத்துச் சென்றது. நேற்று நண்பகல் கொழும்பிலிருந்து வந்த பிரயாணிகளும் வடமராட்சிக்கு செல்லமுடியாமல் கஷ்டப்பட்டனர்.

## 'வரிகள் இன்றி விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குக'

ஓமந்தை, ஞாயிறு
விவசாய இயந்திரங்களுக்கும்மற்றும் விவசாயத்துக்கு உபயோகப்படுத்தப்படும் உபகரணங்களுக்கும் வரி விலக்கு அளிக்கும்படி ஓமந்தை கிழக்குமூலை வடக்கு கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கிராமசபைத் தலைவர் திரு. அ. வீரகத்தி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

விவசாயிகளுக்கு உபகரணங்கள் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வது அவர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்குமெனவும் இதனால் உணவு உற்பத்தி நாட்டில் அதிகரிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இ. போ. ச. பஸ் சேவை ஓமந்தை மக்களுக்குத் திருப்திகரமானதாகவில்லையெனத் தலைவர் இது பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க எல்லோரும் உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# 'மாண்டவர்' மீண்டார்

## மரண வீட்டில் நடந்த புதுமை

உடுப்பிட்டி, ஞாயிறு
வயோதிப மாது இறந்துவிட்டாரென எண்ணி மரண வீடு கொண்டாடியவர்கள் மாண்டவர் மீண்ட விந்தையைக் கண்டு திகைத்தனர்.

இச்சம்பவம் கரணவாய் வடக்கு "குளங்கரை" என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது. செல்லாச்சி என்னும் 75 வயது வயோதிம மாது ஒருவர் ஜன்னி ஜுரத்தினால் பீடிக்கப் பட்டிருந்தாராம். ஜுரம் அதிகரித்தமையினால் பிரஸ்தாப பெண்ணின் தோள் மூட்டு எலும்புகள் வலியினால் மேலெழும்பினவாம். அத்துடன் இவர் மூச்சுப் பேச்சில்லாமல் இருக்கவே அவரது உறவினர்கள் அவரை இறந்து விட்டதாக எண்ணி கைகள் கால்களை மடித்து விட்டு அயலவர்கட்கு சொல்லி அனுப்பி மரண வீட்டிற்குப் பந்தலும் போடப் பட்டது மரணச் செய்திகேட்டு ஓடிவந்த உறவினர்களும், அயலவர்களும் ஒப்பாரி வைத்து அழ ஆரம்பிக்கையில் இறந்து விட்டதாகக் கருதப்பட்ட வயோதிபப் பெண் சாவகாசமாக எழும்பி இருந்து நடப்பது என்னவென்பது அறியாது விழிக்கத் தொடங்கினாராம். இதனைக் கண்டு திகைப்பும் வியப்பும் அடைந்த உறவினர்கள் வைத்தியர் ஒருவரை அழைத்து வந்த போது அவரைப் பரிசோதித்த வைத்தியர் ஜன்னியினால் ஏற்பட்ட விளைவே என்று கூறிச் சென்றாராம்.

## கி. வா. ஜ. வுக்கு ரூ. 5000 பரிசு

சென்னை, டிச. 24
தமிழறிஞரும், 'கலைமகள்' ஆசிரியருமான திரு. கி. வா. ஜகந்நாதனுக்கு இந்திய சாகித்திய அக்கடமியின் 5000 ரூபா பரிசும், விருதும் கிடைத்துள்ளது. [illegible] நூலொன்றுக்கே இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

## 'வேலையில்லாதிருக்கும்நமது அவலநிலையைபோக்குங்கள்'

### தேசிய சேவை அமைச்சருக்கு மகஜர்

காங்கேசன்துறை, ஞாயிறு
இலங்கை வேலையற்றோர் பயிற்றப்பட்ட போதனா ஆசிரியர் சங்கம் தேசியமய சேவை அமைச்சர் வி. ஏ, சுகததாசாவிற்கு வேலையற்றிருக்கும் தங்கள் அவலநிலையைப் பற்றி மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இம்மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது:—

இந்தியாவில் பல கல்லூரிகளில் பயிற்றப்பட்ட போதனா ஆசிரியப் பயிற்சி பெற்ற எங்களில் அநேகர் 1959-ம் 60-ம் ஆண்டுகளில் பயிற்சி பெற்றோர் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை மூழுவதிலும் ஒவ்வோர் காரியாதிகாரி பிரிவிலும் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக 150 பயிற்றப்பட்ட போதனா ஆசிரியர்களை விளையாட்டுத்துறை இலாகா எடுப்பதாக அறிகிறோம். இந்த வேலைக்கு இன்னும் 35 வெற்றிடங்கள் இருப்பதாக நாங்கள் அறிகிறோம்.

இவ்வெற்றிடங்களில் எங்களையும் நியமிக்குமாறும் இதுபோன்ற ஒருசில சந்தர்ப்பங்களை எங்களுக்கு தந்து உதவுமாறும்கேட்டுக் கொள்ளுகிறோம்.

பயிற்றப்பட்ட போதனா ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எஸ். எம். சுப்பிரமணியம் இந்தமகஜரை அனுப்பிவைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வத்திடம்நமக்கு நம்பிக்கை இல்லாத போது பல பல பிரச்னைகள் கிளம்புகின்றன. அவரிடம் நாம் பூரண நம்பிக்கைவைத்த அதே நொடியில் நமதுபிரச்னைகள் எல்லாம் உடனடியாகத் தீர்ந்துவிடுகின்றன.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம்10ம்திகதி[25-12-67[


## வட பகுதியில் 'பெற்ரோல்'

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே புங்குடுதீவு, செம்பியன்பற்று, காரைநகர், கீரிமலை, காங்கேசன்துறை, பருத்தித்துறை முதலிய இடங்களிலும் மன்னாரை அடுத்த உயிலங்குளப் பகுதியிலும் பெற்ரோல் எண்ணெய் ஊறுவதாகப் பிரெஞ்சு நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனராம். இது மிக மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும்.

12 ஆயிரம் அடி ஆழத்தில் பெற்ரோல் கசியும் மண்ணையும் கல்லையும் வெளிநாட்டுக்கு அனுப்பி ஆராய்வதாகத் தெரிகிறது. இந்த ஆராய்ச்சியின் பயனாக இங்கு பெற்ரோல் எடுக்க முடிவதாயின், வட பகுதியின் பொருளாதாரம் உயர்வதுடன் மட்டுமன்றி இலங்கையே சுபீட்சமடையக்கூடும்.

காரைநகர் கடற்கரையிலிருந்து கடல்மார்க்கமாக இந்தியக்கரை வரையில் கடலுக்குள்ளும் இந்த ஆராய்ச்சி நடக்குமாம். இந்தியாவையும் வட இலங்கையையும் இந்தப் பாதாள பெற்ரோல் ஊற்று இணைப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதே சமயம் தமிழக கடற்கரை ஓரத்திலும் பெற்ரோல் எண்ணெய் ஆராய்ச்சிகள் நடக்கின்றனவாம். ஏதோ நல்ல நம்பிக்கை இருப்பதால்தான் இந்த ஆராய்ச்சிகளை வெளிநாட்டு நிபுணர்கள் நடத்துகின்றனர்.

பூமித்தாய் நமக்கு வேண்டுவனவெல்லாம் கொடுக்கக் காத்துள்ளாள். நீர்வளமும் நிலவளமும் கொண்டு நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை நாமே உற்பத்திசெய்துகொள்ள முடியும். இறை அருளால் இங்கு பெற்ரோலும் கிடைத்துவிடுமாயின், பிறர் உதவிக்கு நாம் கையேந்தி நிற்காமல், அன்னக்காவடி தூக்காமல், நாம் பலருக்கும் உபகாரமாக வாழ வழி பிறக்கும். இந்த ஆராய்ச்சியின் பயனாக பிரான்ஸிலிருந்து நல்ல செய்தி சீக்கிரம் கிடைக்குமென நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம்.

## 'ஹிந்தியை எதிர்த்து இறுதிவரை போராடுவேன்' — ராஜாஜி

சென்னை, டிச. 24

ஆட்சிமொழி திருத்த மசோதாவை எதிர்த்து இறுதிவரை போராடப் போவதாக ராஜாஜி அறிவித்தார். இந்த நியாயமான விஷயத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர் கூறினார்.

லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் இவ்வாறு ராஜாஜி பேசினார். பொது மக்களுடன் தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக அவருடைய வேண்டுகோளின் பேரில் கூட்டம் நடத்தப்பட்டது.

### பிரதமர் பிடிவாதம்

''மசோதாவை நியாயம் எதிர்க்கிறது'' என்ற பொருள்பற்றி அவர் பேசினார். நியாயத்தின் அடிப்படையில் ஆட்சிமொழி திருத்தமசோதா இல்லை என அவர் குறிப்பிட்டார். இதுவிஷயமாக சமீபத்தில் பிரதமர் இந்திராகாந்தியுடன் தாம் கடிதப்போக்குவரத்து நடத்தியதாகவும் பிரச்னையை இப்போதைக்கு ஒத்திவைத்து அதைத் தீர்க்க தேசியமகாநாடு நடத்தவேண்டுமெனத் தாம் வற்புறுத்தியதாகவும் கிளர்ச்சி வலுக்காதிருப்பதற்காக மேலும் ஒத்திவைப்பு அசாத்தியம் என பிரதமர் உறுதியாக பதில் அளித்ததாகவும் ராஜாஜி தெரிவித்தார்.

இந்தியாவில் 30 முதல் 40 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றில் பல சிறிய சிறுபான்மையினரால் பேசப்படுகின்றன. பெரும்பாலானவர்கள் பேசும் மொழியல்ல ஹிந்தி. ஆனால் சிறுபான்மையினரில் அதிகமானவர் பேசுவது அது. நூற்றுண்டுகளுக்குமேல் ஆங்கிலம் இந நாட்டின் ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது. நாட்டின் எல்லாப் பாகங்களிலும் அது சமமாகப் பரவியிருக்கிறது. நாட்டை ஆங்கிலம் ஒற்றுமைப்படுத்தியுள்ளது என்றார் ராஜாஜி.

தென்னிந்தியாவை ஹிந்தி வெல்வதை எதிர்ப்பதில் சென்னை அரசாங்கமும் அண்டை ராஜ்யங்களும் சேருமென நம்புவதாகவும் ஆனால் ஆதரவின் அளவு பற்றி தனக்கு நிச்சயமாகத் தெரியவில்லையென்றும் அவர் சொன்னார். தனியாக நின்று போராடவும் தான் தயார் என்றார் அவர்.

சுதந்திரப் போராட்டத்தில் சேர்ந்தபோது தனக்கிருந்த நம்பிக்கையைவிட அதிக நம்பிக்கையுடன் புதிய கிளர்ச்சியில் இறங்கப்போவதாக அவர் கூறி இந்தியாவுக்குச் சுதந்திரம் உண்மையான நல்லாட்சியை அளிக்குமா என்பது பற்றி தான் சந்தேகப்பட்டதாக தன் நாட் குறிப்புகள் காட்டும் என அவர் தெரிவித்தார். இப்பொழுது தனக்கு அத்தகைய சந்தேகங்கள் இல்லை என்றார்.

தன் கிளர்ச்சியின் பயனாக ஆங்கிலத்துக்கு வெற்றியும், ஹிந்திக்குத் தோல்வியும் ஏற்படுமென அவர் உறுதி தெரிவித்தார்.

## ஆசிரியர்கள் இடமாற்றம்

வட பகுதியிலுள்ள உயர்தர கல்லூரிகளில் உயர்தர பாடங்களைக் கற்பிக்கும் முறையில் அனுபவமும்திறமையும்வாய்ந்த சிரேஷ்ட கலைப்பட்டதாரிகளைத் திடீரென கல்லூரிகளிலிருந்து பிற மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்வது எந்த ஒருநாட்டிலும் கேள்விப்படாததும், கல்விநியதிகளுக்கு அமையாததுமான ஒரு செயலாகும். ஆற்றலும் அனுபவமும் பெற்றஆசிரியர்களை உயர்தர வகுப்புகளேயில்லாத கிராமப்புறப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்துள்ளது ஆசிரியஉலகத்திற்கு இழைத்தபெரும் துரோகமாகும். உயர்தரக்கல்லூரிகளில் கல்வி புகட்டுவதற்குத் தகைமையும் தகுதியுமுள்ள ஆசிரியர்களைத் தொடர்ந்தும்அக்கல்லூரிகளிலேயே கடமையாற்றக்கூடிய வசதிகளைப்பிற நாடுகளில் கடைப்பிடித்து வருகின்றனர். இங்கிலாந்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள், ஆசிரியர்களை நியமிக்கும்போது வட்டார எல்லைக்குள் அவர்களைக் கடமையாற்ற நியமிக்காது பள்ளிக்கூடங்களைச் சுட்டிக்காட்டியே நியமிக்கின்றன.

இந்த அடிப்படையில், நமது நாட்டின் கல்லூரிகளில் உயர்தர வகுப்புகளில் கடமையாற்றும்ஆசிரியர்களை இடமாற்றம் செய்தது சோதனையும் வேதனையும் அளிப்பதாகும். இத் திடீர் இடமாற்றம் மாணவர்களுக்கும் கல்லூரிகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதுமல்லாமல் நெருக்கடிநிலைமையையும் உண்டாக்குகிறது.

கல்வித் திணைக்களப் பகுதியினரால் மதிப்பீடு செய்யப்பட்டு, மேலதிகமாகக் காணப்பட்டஆசிரியர்களே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று கல்வி மந்திரி பாராளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்ததகவல் உண்மைக்கு முரணானது என்று கூறப்படுகிறது. இதன் காரணமாகத்தான் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டனவாயின் இவ்விஷயத்தைமீண்டும் மந்திரி புனராலோசனை செய்வது நாட்டுக்கு நன்மையளிப்பதாகும்.

## இன்றைய பலன்

[25-12-67]

திங்கட்கிழமை

மார்கழி மீ 10 உ

நட்சத்திரம்- அத்தம் பி.ப. 3-16மேல் சித்திரை

திதி-நவமி இரவு10-46 மேல் தசமி

சுபநேரம்-12-26- 1-56

ராகுகாலம் 7-56 9-26

மேஷம் - பரிதாப நிலை, பகைத்துக்கொள்ளாதே.

ரிஷபம்-அன்பர்கள் வருவர், ஆதரவு தருவர்.

மிதுனம் - பயன் தரும் பயணம். பழைய நினைவுகள்.

கடகம்-நிதி உதவிகிடைக்கும். நிமிர்ந்து நில்.

சிம்மம்- வரவில் முடக்கம், வாழ்வில் சோர்வு.

கன்னி- குசுகுசுப் பேச்சு குமைச்சல் அதிகம்.

துலாம் - உயர்ந்த நோக்கு உரிமை கிடைக்கும்.

விருச்சிகம் - சீரணக் குறைவு, சிறுபிணி.

தனுசு - அன்னை வழி ஆதரவு, ஆனந்தநிலை.

மகரம் - வாழ்வில வசந்தம், வழியும் பிறக்கும.

கும்பம்-சிந்தையில் குமுறல். செயலில் பதட்டம.

மீனம்- ஒளிவிடும்வாழ்வு துளிர்விடும் காதல்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், திங்கள்

அண்மையில் வீசிய புயலினாலும் கடல் பெருக்கினாலும எழுவைதீவிலுள்ள இறங்குதுறைப் பாலத்தின் பெருமபகுதிசிதைந்ததுடன் பாலத்தின முன்பகுதி முற்ருக அழிந்துவிட்டது. இதனால் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் மோட்டார்படகுகள் பாலத்தில் அருகிலுள்ள பிரயாணிகளை ஏற்ற இறக்க முடியாத நிலைஏற்பட்டது. அவ்வூரின் போக்குவரத்து ஸ்தம்பிதமானதுடன் மக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாயினர்.

அவ்வூர்க் கிராம சபைத் தலைவர், கிராம சேவகர் திரு. கமலநாதன், உப தலைவர் திரு. சு. அந்தோனிமுத்து ஆகியவர்கள் செய்த பெருமுயற்சியினால் அவ்வூரிலுள்ள நல்லெண்ணமும் பொதுச் சேவை மனப்பான்மையுமுடைய இருபதுக்கு மேற்பட்டவர்களைக் கொண்டு தற்காலிகமாக ஒரு பாலத்தைச் சிரமதான முறையில் அமைத்துள்ளனர். [நி.]

## 'அனலைதீவிலிருந்தும் ஒருவரை நியமியுங்கள்'

அனலைதீவு, ஞாயிறு

'தீவுப்பகுதி ஐக்கியமோட்டார் வள்ள சங்கத்துக்கு புதிதாக நியமிக்கப்படும் பொறுப்பாளர்களைத்தெரிவு செய்யும்போது, அனலைதீவிலிருந்தும் ஒருவரைத் தெரிவுசெய்யுங்கள்.'

இவ்வாறு குறிப்பிடப்பட்ட மகஜர் ஒன்றை அனலைதீவு மகாஜன சபைத் தலைவர் திரு. செ. நமசிவாயம் கூட்டுறவு உதவிஆணையாளருக்கும், தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினருக்கும்அனுப்பிவைத்துள்ளார். 31 அங்கத்தவர்கள் கையொப்பமிட்ட இம்மகஜரில், போக்குவரத்து வசதிகள் கூடிய நயினாதீவிலிருந்து பொறுப்பாளரைதெரிவு செய்துள்ளதாக அறிவதாகவும், அதிகமான பிரயாணிகள் உள்ள அனலைதீவிலிருந்தும் தகுதிவாய்ந்த ஒருவரைத்தெரிவு செய்யும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிராமாந்தரகோடு நடைபெறவில்லை

நெடுந்தீவு, ஞாயிறு

சென்ற 7-ம் திகதி நடைபெறவேண்டிய கிராமாந்தரக்கோர்ட்டு வழக்குகள் அன்று வீசிய கடும்காற்ருலும் மழையாலும் நடைபெறவில்லை. இக்கோர்ட்டிற்குரிய நீதிபதி அன்று இங்கு வந்து சேரமுடியாது கடல் பிரயாணங்கள் துண்டிக்கப்பட்டிருந்தமையே முக்கிய காரணமாகும். இருந்தும் அன்று இக்கோட்டில் வழக்குள்ளவர்கள் இதுவரை தங்களுக்கு அடுத்த தவணை எப்போது என்பது தெரிவிக்கப்படாமல் இருப்பது பெரும் கவலைக்கிடமான விஷயமெனக்கூறுகிறார்கள்,

## அரசாங்க மருந்து களஞ்சியம் பண்ணையில் அமையும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண அரசாங்க மருந்துக்களஞ்சியம் சுமார் 2 வருட காலத்துக்கு பண்ணையில் உள்ள அங்கவீனர்களுடையவிடுதியில் அமையுமெனத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பானமுறையில் யாழ்ப்பாண அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குரிய மருந்துகளைச் சேமித்து வைப்பதற்கு கட்டிடம் புதுவருட முற்பகுதியில் ஆரம்பமாகுமெனவும், அக் கட்டிடம் முடிவடையும் வரையும் மருந்துக்களஞ்சிய பண்ணை அங்கவீனர் விடுதியில் அமையுமென்றும், இதனால் அங்[...]ர்கள் பாதிக்கப்பட க

## நாட்டிலும் நகரிலும்

தமிழ் மக்கள் தலைநகராம் சென்னைமா பட்டினத்தில் டிசம்பர் மாதத்தில் இசை விழாக்கள் நடக்கும்போது பறபல சர்ச்சைகள் ஆண்டுதோறும் நடைபெறும். மியூஸிக் அக்கடமி, தமிழ்இசைச் சங்கம், தென்னிந்திய நுண்கலைக் கழகம் என்று இன்னும்பல சங்கீத சபைகளில் இசைவிற்பன்னர்கள் மட்டுமன்றிமுதன்மந்திரிகள், ராஜ்யகவர்னர்கள், அரசியல் தலைவர்கள் முதலாம் பிரமுகர்களும் இசையைப்பற்றி பிரமாதமான விவாதங்கள் நடத்துவார்கள்.

இசை நுணுக்கம்பற்றிய ஆராய்ச்சிகள் ஒருபுறமிருக்க சமீப காலத்தில் [குறிப்பாகச் சொல்லப்போனல் 1941-ம் வருடம் ராஜாசேர் அண்ணமலைச்செட்டியார் தமிழிசை இயக்கத்தைஆரம்பித்த காலம் தொடக்கம்[ இசையில் மொழியின் பங்கு பற்றியும் வருடா வருடம் வாதப்பிரதிவாதங்கள் நடந்து வந்திருக்கின்றன.

இசை தன்னால் மட்டும் இயங்க முடியுமா அல்லது அதற்கு இயலின் [மொழியின்] உதவியும்வேண்டுமா என்ற கேள்வி இன்றுவரை சர்ச்சைக்கிடமாகி வருகிறது.

தனி இசையை மட்டும் [அதாவது இயலின் உதவியில்லாமல்] ஒருவர் நுகர்ந்து ரஸிக்க முடியுமா அல்லாவிட்டால், இசைக்குஇயலின் உதவி இன்றியமையாததா?

இந்த விஷயத்தில் இசையாளர்களும், பொதுமக்களும் சற்றே முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும் என்றுஇவருக்குப் படுகிறது. நன்ருக ஆலோசிக்காமல் முடிவுசெய்வது நன்றன்று. எப்படியாயின் என்று பார்ப்போம்.

ஒரு வித்வான் வீணையோ, வயலினே, புல்லாங்குழலோ அல்லது நாகசுரமோ வாசிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் ஓர் இன்பமான ராகத்தை இசைக்கிறார். நன்ருகஇசைக்கிறார். இசையுள்ளம் படைத்தவர்களுக்கு அது இசைதான், இன்பமும் தான். அதில் இயல் அல்லது மொழி இருக்கிறதா?

ஐரோப்பிய இசைமேதைகளாகிய பேதோவன், பாக், மோஸாட், வாக்னர் ஆகியோர் தாங்கள் இயற்றிய உலகப் புகழ்பெற்ற இசைக்கோலங்களில் மொழியைப் புகுத்தவில்லை. தனி இசை வண்ணங்களாகவே தீட்டினர்கள். மொழியில்லாமல் இசையை அனுபவிக்கலாம் என்பதை அவர்கள் நிரூபித்துக்காட்டினர்கள்.

சில நாட்களுக்கு முன் இந்திய சிதார் வாத்திய வித்வான் ரவி சங்கரும் மேனாட்டு வயலின் மேதை யெஹூடி மெனுஷினும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சங்கீதம் இசைத்தபோது அந்த வாத்தியங்களில் எந்த மொழியும் கேட்கவில்லை. வெறும் இசைதான் கேட்டது. அதைக் கேட்ட பலர்ஆனந்த பரவசமடைந்தார்கள்.

உண்மையாக இசைப் பண்பு உள்ளவர்கள் தேனீக்கள் ரீங்காரத்திலும், தவளைகள் ஆரவாரத்திலும், தென்றலின் தவழ்ச்சியிலும் இனிமை காண்பார்கள்.

'யாழினிது குழலினிது என்பர், தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்று வள்ளுவர் கூறியது போல் அதிலும் இசையிருக்கிறது.

மொழிப்பிரச்னை இடையில் புகுந்தது!

—வழிப்போக்கன்.

மாட்டார்களென்றும் சமூக சேவை அதிகாரி திரு. எஸ். திருச்செல்வம் அறிவித்துள்ளார். [வி. நி]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய ஆட்சி மொழி திருத்த மசோதாவை வாபஸ் பெற்று விடுமாறு கோரிக்கை

## பிரதமர் இந்திராவிடம் ராஜாஜி

சென்னை, டிசெம்பர் 24

**இந்திய ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவை, ராஷ்டிரபதியின் இசைவுக்கு அனுப்புவதற்கு முன், வாபஸ் பெற்றுவிடுமாறு சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் கோரியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.**



தமது கருத்துக்குச் சாதகமாகவே தமிழக அரசும் உள்ளதாக ராஜாஜி குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான சூழ்நிலையில், மொழிப் பிரச்னை மீதான ஒரு தேசிய மாநாட்டை அழைக்குமாறு அவர் பிரதமரிடம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஆட்சிமொழிசம்பந்தமாக ஏற்கப்பட்டுள்ள சிலதிருத்தங்கள், இந்திபேசாதமக்களிடம் அதிருப்தியை உண்டு பண்ணியிருப்பதால், அவற்றைத் தற்போதய சூழ்நிலையில், ஒத்திப்போடுவதே சிறந்ததென ராஜாஜி தெரிவித்தார்.

### பலாத்காரத்துக்கு எதிர்ப்பு

ஆனால், சென்னையிலும் பிற நகரங்களிலும் இந்தி மொழியை எதிர்த்து நடைபெறும் பலாத்கார ஆர்ப்பாட்டங்களை ராஜாஜி கண்டித்தார். இப்பலாத்காரச்



சம்பவங்கள் பற்றித் தாம் தமிழக மந்திரிகளுடன் பேசியதாகவும், பலாத்காரத்தை எவ்விதத்திலும் அரசாங்கம் எதிர்க்கக்கங்கணம் கொண்டுள்ளதாகவும் ராஜாஜி மேலும் தெரிவித்தார்.

### மாணவர்களிடம் வேண்டுகோள்

பலாத்காரத்தில் ஈடுபட வேண்டாமென்று ராஜாஜி தமிழகமாணவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வடக்கிலும் தெற்கிலும் மாணவர் ஆர்ப்பாட்டம்

இதற்கிடையில், மதுரை, கோயம்புத்தூர். திருச்சி ஆகிய நகரங்களில்மாணவர்கள் நேற்றும் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டதாகச் செய்திகள்தெரிவிக்கின்றன.

சில இடங்களில், ஆர்ப்பாட்டம் நிகழ்த்திய மாணவர்கள், ரயில் தண்டவாளங்களை அகற்றுவதில் ஈடுபட்டனர், மதுரைக்குத் தெற்கே, இரண்டு ரயில்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

### லக்னோவில்

வட இந்தியாவில், ஆங்கிலத்துக்கு எதிராக லக்னோவில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள், 5 அரசாங்க பஸ்களுக்குச் சேதம் விளைவித்தனர்

---

# பாப்பரசரை ஜோன்சன் சந்தித்தார்

## வியட்னும் போர் தீர்வு பற்றி இருவரும் பேசினர்

ரோம், டிச.24

**அமெரிக்க ஜனதிபதி திரு.ஜோன்ஸன் நேற்று பாப்பரசர்போலை ரோமில்சந்தித்துப்பேசினர். ரோமுக்கு, ஒரு குறுகிய விஜயத்தில்சென்ற ஜனதிபதி, பாப்பரசருடன்வியட்னும்பிரச்னை பற்றிப் பேசினர். முன்னதாக திரு. ஜோன்ஸன், இத்தாலிய ஜனதிபதியைச் சந்தித்துச் சில நிமிடங்கள் பேசியிருந்தார்.**



பாப்பரசரைச் சந்தித்த பின், பத்திரிகையாளரிடம் பேசுகையில், அது ஒரு நல்ல சந்திப்பு என்றும், நல்லபலன்களை அது அளிக்கும் என்று தாம் நம்புவதாகவும் ஜனதிபதி ஜோன்ஸன் கூறினர். வியட்னும் போருக்கு ஒரு கௌரவமான தீர்வு ஏற்படுமென்பதில் தமக்குள்ள நம்பிக்கையை ஜோன்ஸன்மீண்டும் வலியுறுத்தினர்,

### பாப்பரசர் கோரிக்கை

போரில் சம்பந்தப்பட்ட இரு சாராரையும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுமாறு பாப்பரசர் புத்திமதி கூறியதாகவும் ஜோன்ஸன் தெரிவித்தார். பாப்பரசரின் புத்திமதியைத் தாம் வரவேற்பதாக அவர் கூறினர்.

வடவியட்னும் மீதான

[4-ம் பக்கம் பார்க்க]

---

## நிஜலிங்கப்பா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### தோல்வியடைந்தது

மைசூர், டிசெ. 24

திரு.நிஜலிங்கப்பாவின்தலைமையிலான மைசூர் மந்திரி சபை மீது நேற்று மைசூர் அசெம்பிளியில் கொண்டு வரப்பட்ட எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

அச் சந்தர்ப்பத்தில் பேசுகையில், வகுப்புவாததீயை மூட்டிவிடவேண்டாமென்று சபை அங்கத்தவர்களை மைசூர் முதல்மந்திரி திரு. நிஜலிங்கப்பா கேட்டுக் கொண்டார்.

---

புது டில்லியிலுள்ள

## அமெரிக்க தூதரகத்தில் தஞ்சம் புகுந்த ரஷ்ய இளைஞர்

### பிரிட்டன் செல்ல விருப்பம்

புதுடில்லி, டிச. 24

இந்தியா வந்த ரஷ்யஇளைஞர் தூதுகோஷ்டியொன்றின் அங்கத்தவரான ரஷ்ய இளைஞர் ஒருவர், அண்மையில் புதுடில்லியிலுள்ளஅமெரிக்க தூதரகத்தில் தஞ்சம் புகுந்த செய்தி வாசகர்கள் அறிந்ததே. அவர் நேற்று, தொடர்ந்து நான்காவது நாளாக, அமெரிக்கத்தூதரகத்திலேயே தங்கியிருந்தார்.

இதற்கிடையில், பிரிட்டனுக்குச்சென்று தங்க அவர் விருப்பம் தெரிவித்ததையடுத்து, அவருக்குப் பிரிட்டன் செல்ல அனுமதியளிக்கும் தஸ்தாவேஜுகளைத் தாம் தயார்செய்து வருவதாகப் புதுடில்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த ரஷ்ய இளைஞரின் பாஸ்போர்ட்டை ரஷ்யஅரசாங்கம் ரத்துச் செய்துள்ளது.

---

## 'தலாய் லாமாவை இந்தியா அங்கீகரிக்க முடியாது'

புதுடில்லி, டிசெ. 24

தலாய்லாமாவைச் சட்டவிரோதமான ஓர் அரசாங்கத்தின் தலைவராக அங்கீகரிக்கும்நிலையில் இந்தியா இல்லையென்று இந்திய பாதுகாப்புமந்திரி சர்தார் சுவர்ண்சிங் நேற்று லோகசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

சீனவுடன் இந்தியாவுக்கு அபிப்பிராயபேதங்கள் இருந்தபோதிலும், திபேத் விஷயத்தில், இந்தியாவின் கொள்கைநிலை. 1954-ம் வருடத்தைய சீன—இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே உள்ளதாகப் பாதுகாப்பு மந்திரி மேலும் தெரிவித்தார்.

---

## நத்தாரை யொட்டி கிரீசில் அரசியற் கைதிகள் விடுதலை

அதென்ஸ், டிச. 24

கிரீசில் உள்ள இராணுவ ஆட்சியாளர், நத்தாரை யொட்டி, தாம் கைது செய்த பல அரசியல்வாதிகளை விடுதலைசெய்துள்ளனர். இப்படி விடுதலைசெய்யப்பட்டவர்களில் இருவர், முன்னுள் கிரேக்கப் பிரதமர்களாவர்.

கம்யூனிஸ்டுகளும், குண்டு வெடிப்பு போன்ற பலாத்காரச்சம்பவங்களில் ஈடுபட்ட கைதிகளும், இந்த விடுதலையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

கிரீசுக்கு ஒரு புதிய அரசியற் சாஸனத்தை உருவாக்கும் நோக்கத்துடன், பொதுஜன வாக்கெடுப்பொன்று விரைவில் நடத்தப்படுமென்று கிரேக்க பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தப் பொதுஜன வாக்கெடுப்பு, அடுத்த ஏப்ரலில் நடைபெறுமெனத் தெரிகிறது

### மன்னர் வரவேற்றார்

இதற்கிடையில், அரசியற் கைதிகளைக் கிரேக்க அரசாங்கம் விடுதலைசெய்திருப்பதை ரோமிலுள்ள கிரேக்க மன்னர் கொன்ஸ்டைன் வரவேற்றுள்ளார்.

தமது நாட்டு மக்கள் பூரணஅரசியல் சுதந்திரத்தைக்கொண்டாடும்வகையில், அவர்களின் உரிமைகள் யாவும் திருப்பி அளிக்கப்படுமெனத் தாம் நம்புவதாகவும் மன்னர் கூறியுள்ளார்.

---

# மே. வங்காள அரசியல்நெருக்கடி

## தீர்வு காண்பதில் இந்திரா உறுதி

சாந்திநிகேதன், டிசெ. 24

**மேற்கு வங்காளத்தில் ஏற்பட்டுள்ள அரசியற் சாஸன ரீதியான அசமந்த நிலைக்கு ஒரு தீர்வுகாண இந்திய மத்திய அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினர்.**

மேற்கு வங்காள அரசியல் நெருக்கடிக்கு எப்போது மத்திய அரசாங்கம் தீர்வு காணும் எனப் பத்திரிகையாளர் அவரிடம் வினவியபோது, எந்த ஒரு பிரச்னையும் தீர்வு காண முடியாமலில்லை என்றும், மேற்கு வங்காள அரசியல் பிரச்னைக்கான தீர்வு எப்படி அமையுமென்பது இன்னும் தீர்மா [illegible] திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார். 'பிரச்னையிலிருந்து எப்படியோ ஒரு வழி காண்போம்' என்றார் அவர்.

இதற்கிடையில், நேற்று ராஜ சபையில், மேற்கு வங்காளப் பிரச்னை விவாதிக்கப்பட்டது. மேற்கு வங்காளத்தில் தற்போதுள்ள கோஷ் மந்திரி சபையைக் கலைத்துப் புதிய தேர்தல்கள் அங்கு நடத்த வேண்டுமெனக் கோரும் ஒரு தீர்மானம், சபையில் தோல்வியடைந்தது.

### சவாண் பேச்சு

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இந்திய உள்துறை மந்திரி திரு. சவாண், மேற்கு வங்காளத்தில், பதவியில் நியமிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தைச் செயற்பட விடாது எதிர்ச்சக்திகள் தடுப்பதாகக் கூறினர்.

திரு. கோஷ் தலைமையிலுள்ள மந்திரி சபை, சபையில் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை நிலைநாட்ட அதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லையென்று கூறிய திரு சவாண், அப்படிப் பெரும்பான்மைப் பலம் இல்லையெனக் கண்

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மாவுக்கப்பல் அனுப்புக'

காங்கேசன்துறை, ஞாயிறு யாழ்ப்பாணத்துக்கு உடனடியாக மாவுக்கப்பல் ஒன்றை அனுப்பிவைக்கும்படி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா உணவுக் கமிஷனர் திரு. ராஜகருணவுக்கு அவசரத்தந்திஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## பிரயாணிகள் வள்ளத்தில் கருவாடு

அனலைதீவு, ஞாயிறு நூற்றுக்கதிகமான பிரயாணிகள் போக்குவரத்துச் செய்யும் மோட்டார் வள்ளங்களுக்குள் மீனும்கருவாடும் ஏற்றப்படுகின்றனவாம். தீவுப்பகுதி ஐக்கிய மோட்டார் வள்ள சங்கத்துக்குச் சொந்தமான குறிப்பிட்ட படகுகளிலேயே இத்துர்நாற்றம் வீசுகின்றதாம். இதனால் பிரயாணிகள் கஷ்டப் படுகின்றனர். பிரயாணிகளுக்கென சேவையில் ஈடுபடும் வள்ளங்களில் துர்நாற்றம் வீசும்கருவாட்டை ஏற்ற அனுமதியளிக்கவேண்டாமெனக் கோரும் மகஜர் ஒன்றை கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனலைதீவு பிரயாணிகள் சங்கத்தலைவர் திரு. ச. க. காசிலிங்கம் அனுப்பியுள்ளார்.

## மருந்துவில்லைகள் யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட மருந்து வில்லைகள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

## 107-வது வயதில் மரணம்

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு நெல்லியடியைச் சேர்ந்த சிலம்பு வீரகத்தி என்னும் முதியவர் தமது 107-வது வயதில் கடந்தவாரம் காலமானார். இவர் வமது கடைசி ஆண்டுகளில் தீவிரமாக சீட்டாடுவதில் ஈடுபட்டிருந்தார். இறந்த காலத்திலும் இவருடைய பற்கள் உறுதியாக இருந்தன.

### பாப்பரசரை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]
குண்டு வீச்சை நிறுத்தி, ஹனோயுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த அமெரிக்கா எந்த நேரத்திலும் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மேலும் கூறினார்.

### நத்தா செய்தி

இதற்கிடையில், பாப்பரசர் உலக மக்களுக்கு விடுத்துள்ள நத்தார் செய்தியில், சமாதானம் மனிதர்களின் உள்ளங்களில் ஏற்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின்யுளார்.

### மேற்கு வங்காள..

[3ம் பக்கத் தொடர்ச்சி]
டால், அது கட்டாயம் வெளியேறிவிடும் என்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்தார்.

பதவியிலிருந்து விலகிய சில அரசியற்கட்சிகள் ராஜ்யத்தில் சட்ட மறுப்பு இயக்கமென அழைக்கப்படும் கிளர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்துள்ளதைத்திரு. சவாண் கண்டித்தார்.

### 2,000 போ கைது

இதற்கிடையில், இந்தக் கிளர்ச்சி இயக்கத்தின் கடைசி நாளாகிய நேற்று, கல்கத்தாவில் மட்டும் சுமார் 2,000 பேர் கைது செய்யப்பட்டனர். ஆங்காங்கே பொலிசாருக்கெதிராகச் சில பலாத்காரச் சம்பவங்களும் நடந்துள்ளன.

## மயிலிட்டி

# மீன்பிடிதுறைமுகவேலைகள் இரு மாதத்தில் ஆரம்பமாகும்

காங்கேசன்துறை, ஞாயிறு மயிலிட்டியில் அமைக்கப் படவிருக்கும் மீன்பிடித் துறைமுக வேலைகள் இன்னும் இரண்டுமாத காலத்தில் ஆரம்பமாகும். தற்பொழுது மயிலிட்டி கடற்கரையில் கடற் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதன் காரணத்தினால் மீன்பிடித் துறைமுகத்தை பொறுப்பேற்றிருக்கும் அரசினர் பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினர் தமது ஆரம்பவேலைகளை பெப்ரவரி மாதத்திற்கு பின்போட்டுள்ளனர்.

மூன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் இந்த மீன்பிடித்துறைமுகவேலைகள் சென்ற நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகவிருந்தது.

1958-ம் ஆண்டு மயிலிட்டியில் அமைய இருந்த இத்துறைமுகம் நாகதாண்டியாவில் அமைந்தது. இது போன்ற பல சந்தர்ப்பங்களை மயிலிட்டி தவறவிட்டு கடைசியில் இம் முறை இங்கு கட்டுவதற்கான முடிவை எடுத்ததுடன் இதற்கான செலவும் இம்முறை பஜட்டில் ஒதுக்கப்பட்டது.

## ஜனவரி முதல் 'பாஸ் முறை?'

உடுப்பிட்டி, ஞாயிறு மந்திகை அரசினர் வைத்தியசாலையிலும் யாழ். பெரியாஸ்பத்திரியில் உள்ளது போல் இருவர் மட்டுமே சென்று நோயாளர்களைப் பார்க்கக்கூடிய 'பாஸ்முறை' அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அமுல் நடத்தப்படவிருப்பதாக அறியப் படுகிறது. மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி வார்ட்டுக்களில் பார்வையாளர்கள் தொகை தினமும் அதிகரித்து வருவதினால் இடநெருக்கடி ஏற்படுவதைத் தொடர்ந்தே பார்வையாளர்களைக் கட்டுப்படுத்த முடிவுசெய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## பயமுறுத்தினாராம்

காங்கேசன்துறை, ஞாயிறு பட்டினசபைக் காரியதரிசியை பட்டினசபை அங்கத்தவர் ஒருவர் தாக்குவதாகப் பயமுறுத்தினாராம்.

காங்கேசன்துறைப்பொலிஸில் காங்கேசன்துறைப்பட்டினசபைக்காரியதரிசி திரு. டபிள்யு. வி. செல்வரத்தினம் தம்மைப்பயமுறுத்தியதாகப் புகார்செய்துள்ளார். பட்டினசபை 5-ம் வட்டார அங்கத்தவர் ச. சிவனடியான் பட்டினசபை அலுவலகத்தில் கடமையைச் செய்யவிடாது தடைசெய்ததாகவும், தாக்குவதாகப் பயமுறுத்தியதாகவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி காங்கேசன் துறைப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.




செறிந்த சுவை, சிறந்த கலவை,
நிறைந்த புகை பிடி இன்பம்...
இவை தரும்
திருப்தியின் சின்னமே
திரீரோஸஸ்
இலங்கையின் அபிமான சிகரெட்

இலங்கையில் தயாரிப்போர்
சிலோன் டொபாக்கோ கம்பனி லிமிடெட்
P756

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஏல விற்பனை

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்திற்குரிய பின் வரும் பொருள்கள் 28-12-67 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அவ்விடத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

1. வெற்றுச் சாக்குகள்.
2. நீர் இறைக்கும் யந்திரம்.
3. வெற்றுத் தகரங்கள்.
4. 2, 1 1/2 இஞ்சிப் பைப்புகள்.
5. ஸ்பிறேயர் 2.

காரியதரிசி,
அ. ப. நோ. கூ. ச.

அளவெட்டி,
22-12-67. 392


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி
நடித்த
**முகராசி**



**REGAL** JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
David Mccallum
in
M. G. M's
Three Bites of
the Apple
[Metro color]



**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00 &
9-45 p.m. Poya days &
publicHolidays at 10-30AM
JIM REEVES
in
KIMBERLEY--JIM
(In Sparkling Color)


## வீனஸ் வெற்றி

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

வதிரி பொம்மேஸ் கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புத்தூர் வீனஸ் கோஷ்டியும் வல்வை புளூஸ் கோஷ்டியும் மோதிக் கொண்டபோது வீனஸ் 3—2 கோல்களால் வெற்றிபெற்றது.

திரு. எஸ். கமலநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

அதேயிடத்தில் வல்வை உதயசூரியன் கோஷ்டியை சிவானந்தா கோஷ்டி 8—1 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. எஸ். சிவதயாபரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விளையாடாமலே வெற்றி

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

அல்வாய் மனோகரா கழகத்தின் ஆதரவின் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய் பிளாஸ் கோஷ்டி விளையாடத் தயாராக இல்லாததன் காரணமாக நெல்லியடி ஸ்பேஸ் கோஸ்டி வெற்றியீட்டியுள்ளதாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## சமமானமுடிவு

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

அல்வாய் மனோகரா கழகத்தின் ஆதரவின்கீழ் நடந்து வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வல்வை றெயின்போஸ் கோஷ்டி இமையாணன் கோஷ்டி ஆகியன மோதிக்கொண்ட போட்டியில் இருகோஷ்டிகளும் தலா ஒரு கோல் போட்டு சமமாக முடிந்தன.

திரு.ரீ. சத்தியநாதன் மத்யஸ்தம் வகித்தார்.

## வெற்றி-தோல்வி இல்லை

உடுவில், ஞாயிறு

மானிப்பாய் சில்வெஸ்டர் விளையாட்டுக்கு கோஷ்டியும் உடுவில் ஸ்டார் விளையாட்டுக்கோஷ்டியும் நேற்று மாலை கலந்துகொண்ட சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டிக்கு திரு. கே. பி. கமலநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## மனோகரா வென்றது

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

அல்வாய் மனோகரா கழகத்தால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மனோகரா ஏ கோஷ்டியும், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்ட போட்டியில் மனோகரா 7-0கோல்களால் வெற்றியீட்டியது.

இராஜநாயகம் ஜெயக்கொடி ஆகியோர் திறமையாக விளையாடினர். திரு. எஸ். பாலேந்திரா மத்தியஸ்தம் வகித்தார்.

## இடமாற்றம் நடைபெறும்

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சியிலுள்ள கிராம சேவையாளர்கள் அனைவரும் பெரும்பாலும் அடுத்தவருட ஆரம்பத்தில் வடமராட்சிக் காரியாதிரியின் பகுதிக்குள்ளேயே இடமாற்றம் செய்யப்படலாமென அறியப்படுகிறது.

## வானொலி விசேஷ நிகழ்ச்சிகள்

### திங்கள் 25-12-67

### கொழும்பு

காலை 6-45 கிறிஸ்மஸ் செய்தி, 7-30 கிறிஸ்தவ ஆராதனை, 8-30 கத்தோலிக்க ஆராதனை.

மாலை 5-30 குரல்வகை — தெலுங்குப் பாடல்கள்.

இரவு 7-30 கிறிஸ்மஸ் நாடகம் — "யாருமற்றவர்கள்" — சானு, 9-30 கிறிஸ்மஸ் செய்தி, 9-45 நேயர் விரும்பம்.

### திருச்சி 1

காலை 6-50 பக்திப்பாடல்கள், 6-55 அறவுரை — மறைதிரு யே. சி. ஸ்தாஷ்லாஸ், 7-30 பாட்டு — கல்யாணசோழபுரம் எஸ். துரைசாமி.

மாலை 5-30 கிறிஸ்து ஜயந்தி திருநாள் விசேஷ நிகழ்ச்சி, கிறிஸ்மஸ் செய்தி — தஞ்சை பிசப் உயர்மறை திரு. ஆ. ஏ. சுந்தரம் — திருநாள் கீதங்கள்.

இரவு 6-15 இசைவிழா — சென்னை அஞ்சல், 8-00 இசைவிழா, 9-15 சிலப்பதிகாரச் சிறப்பு — என். ஜெகதீசன், 9-30 இசைவிழா — அஞ்சல்.

### சென்னை 1

காலை 6-45 மறைவழி, 9-15 ஜோதிச்சுடர் — இசைச்சித்திரம், 9-45 இசைமலர், 10-30 மதுர கீதம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு — அமைதியின் அரசர் — இசைச்சித்திரம், 1-00 மாதர்நிகழ்ச்சி — புல்லணையில் பிறந்த பேரொளி — இசைச்சித்திரம்.

இரவு 6-15 இசைவிழா— சென்னையிலிருந்து அஞ்சல், [illegible]

## வரி விளம்பரம்

### தேவை

கல்வி

ஜி. ஏ. கியூ. மாணவருக்கு இந்தியச் சரித்திரம். தமிழ் பொருளாதாரம படிப்பிக்க ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 2002. C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2002

நாவலர் வீதியிலிருக்கும் கோவிந்தபிள்ளைமோட்டார் வேர்க்ஸ் என்னும் தொழிற்சாலை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, இ. கோவிந்தபிள்ளை, 86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல. 278. 2585

### காணவில்லை

பெட்டி:

15-12-67 ஆம் தேதி 2 மணியளவில் யாழ்-சாவகச்சேரி பஸ் வண்டியில் திரு. எஸ். இராமலிங்கம் என்பவருக்கு உரிய மிக முக்கியமான குறிப்புகள் அடங்கிய ஒரு பெட்டி தவறிவிட்டது. இவைகளை எடுத்தவர்களேனும், பிறரேனும் நேரிலோ அல்லது பிறர் மூலமோ 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்தால் மிகுந்த சன்மானம் நன்றியறிதலுடன் கொடுக்கப்படும். 2581

### கல்வி

இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தை ஆரம்பித்த 46 வருட வர்த்தக ஆசிரியரால் 1 வருட, 6 மாத, 3 மாத [ஆங்கில / தமிழ்] சுருக்கெழுத்தாளர், தட்டச்சாளர் விசேட வகுப்புகள் 1-1-68 ஆரம்பிக்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை/ உடுப்பிட்டி. 2196

## அரிசி விலை குறைகிறது

உடுப்பிட்டி ஞாயிறு

நெல்லியடிச் சந்தையில் விஷம்போல் ஏறியிருந்த அரிசியின் விலை திடீரென்று வீழ்ச்சியடைந்துள்ளது. முன்பு 1 கொத்து 1ரூபா 80 சதம் முதல் 2 ரூபா வரை விற்ற நாட்டரிசி இப்பொழுது ரூபா 1-25 சதம் முதல் 1 ரூபா 50 சதம்வரை விற்கப்படுகிறது.


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
நத்தார்—புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
**சிவரும்ஸ்**
[பிரபல பிடவை வியாபாரிகள்]
12, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[நூதனசாலைக்கு முன்பாக]



நத்தார் வெளியீடு!
திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [கஙேடுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
28-ம் திகதி முதல்
விஜிதா [ஹட்டன்] மொடேர்ன் [பதுளை]
சுந்தரராஜன்
நாகேஷ்
முத்துராமன்
ஜெயலலிதா
ஏ. வி. எம்.ராஜன்
நடிக்கும்
**மேஜர் சந்திரகாந்த்**




சிறந்த ஜெம்ஸன்
உங்களுக்கும்
உங்கள் மகனுக்கும்
சேட், கால்சட்டை (Trouser)
GEMSUN GARMENTS
X சுருங்காதது
X இறுக்கமானது
உறுதியானது
X விசேஷ உறுதியான
பொக்கட்டுகள்
X அளவும் திறமையும்
ஒருபோதும் மாறாதது
X பிழையான வேலை இல்லை
என்ற உத்தரவாதம்
X ஒவ்வொரு சிறந்த
கடையிலும்கிடைக்கும்.
வியாபாரிகள்
வலிகாமம் கிழக்கு,
ப. நோ. கூ. ச. சமாஜம்,
நீர்வேலி.
யாழ்ப்பாணம்:
தொலராம்ஸ், பிரதானவீதி.
தயராம்ஸ், பிரதான வீதி.
பொகுமால்ஸ், பிரதானவீதி.
பின்வரும் இடங்களில்
ஏஜெண்டுகள் தேவை
X திருக்கோணமலை
X மட்டக்களப்பு
X கல்முனை
X அம்பாறை
X மன்னார்
X காங்கேசன்துறை
வர்த்தக விசாரணைகள்:-
லக்கி பைவ் இண்டஸ்றீஸ்
155, பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்:- 3184
கால்சட்டை, அரைக்காற்சட்டை, சேட்டுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலையில்

# நவீன விடுதிச்சாலை அமைக்க முயற்சி

அளவெட்டி, சனி

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் புனித ஸ்தலமான கீரிமலைக்கு வரும் யாத்திரீகர்கள் தங்கிச்செல்வதற்கு நவீன வசதிகளைக்கொண்ட விடுதிச்சாலையை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆராய்ந்து திட்டமிட கீரிமலையில் டாக்டர் ஏ. ரி. எஸ். போல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோரைக்கொண்ட நிர்வாக சபையொன்று தெரிவுசெய்யப்பட்டது.

போஷகர்: கேட் முதலியார் திரு. சி. தியாகராஜா, தலைவர்: டாக்டர் ஏ. ரி. எஸ். போல், உபதலைவர்கள்: திருவாளர்கள் முதலியார் சி முத்துத்தம்பி, கே. சி. பிறைசூடி, ஏ. வி. சதாசிவம், டாக்டர் ஆர். ஈ. டபிள்யூ. செகரத்தினம், எம். செல்லத்தம்பி, டாக்டர் சிவகுமாரன், டாக்டர் தேவதாசன், காரியதரிசியும் தனதிகாரியும்: முதலியார் திரு. என். வேலுப்பிள்ளை, கணக்குப்பரிசோதகர்: திரு. எஸ். செல்வரத்தினம், நிர்வாகசபை அங்கத்தவர்களாக திருவாளர்கள் எஸ் வேலுப்பிள்ளை, எஸ். சுப்பிரமணியம், எஸ். செல்லத்துரை, கே. செல்வராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## புதிய காரியதரிசி நியமனம்

வவனியா, ஞாயிறு

வவனியா மாவட்ட அஞ்சல் தொலைபேசித்தொடர்பு யூனியன்கூட்டம் தலைவர் திரு. கே. பொன்னம்பலம் தலைமையின்கீழ் நடைபெற்றது. காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. ரி. சிவலோகநாதன் இடமாற்றமாகிச்செல்வதால் திரு. என். வைத்தியநாத சர்மா புதிய காரியதரிசியாகச் சபையால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

# வன்முறைகளுக்கு அண்ணு கண்டனம்

சென்னை, சனி

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் காரணமாக நடைபெற்றுள்ள வன்முறைச்செயல்கள் யாவும் சமூகவிரோதிகளின் நடவடிக்கைகள் என தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை இன்று கண்டித்தார்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் மாணவர்கள் தீவிரமாக ஈடுபட்டதின் காரணமாக பல முக்கிய இடங்களில் ரயில் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன.

அரக்கோணத்துக்கும் இன்னொரு நகருக்குமிடையிலுள்ள ரயில் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. பம்பாய் - சென்னை எக்ஸ்பிரஸ் வண்டி நிறுத்தப்பட்டது. கேரளத்திலிருந்துவரும் எக்ஸ்பிரஸ்வண்டியும் சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. வேறு பல இடங்களில் ரயில் பெட்டிகள் பல தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கிடைத்துள்

விடுமுறையில்சென்றிளைருந்த முதலமைச்சர்அண்ணுதுரை இன்று சென்னை திரும்பினர். வன்முறைச்செயல்கள் சமூகவிரோதச் செயல்கள் என்றும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட ஒத்துழைப்புத் தரும்படியும் அவர்மாணவருக்குஅழைப்பு விடுத்துள்ளார்.

## வவனியாவில் அரிசிவிலை குறைந்தது

வவனியா, ஞாயிறு

வவனியாவில ஒருபடி அரிசி இதுவரை ரூ1.70சதமாக விற்கப்பட்டு வந்தது. ஆனல் திடீரென 1ரூபாவுக்கு இப்போது வீழ்ச்சி அடைந்துள்ளது. விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளினதும் பொலிசாரினதும் திடீர்நடவடிக்கைகளைத் தொடர்ந்தே இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

# காங்கேசன்துறை நகரசபை அந்தஸ்து பெறும்?

## தனிநபர் கமிஷன் அறிக்கை இவ்வாரம் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இதுவரைகாலமும் பட்டின சபை அந்தஸ்திலிருந்து வந்த காங்கேசன்துறை, விரைவில் நகரசபை அந்தஸ்துப் பெறவிருப்பதாகத்தெரிகிறது.

ஏற்கனவே இதுசம்பந்தமாகப் பிரச்னையேற்பட்டதைத்தொடர்ந்து இதுபற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷன் காங்கேசன்துறைக்கு நகரசபை அந்தஸ்து வழங்க வேண்டுமெனத் தனது அறிக்கையில் சிபார்சுசெய்திருப்பதாகவும், இவ்வறிக்கை இவ்வார முற்பகுதியில் உள்ளூராட்சி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட விருப்பதாகவும் அறியப்படுகிறது.

இக்கமிஷன் முன் இரண்டு உள்ளூராட்சி மன்றங்கள் உட்படச் சுமார் 35 சமூகசேவா சங்கங்களும் பொதுமக்களும் சாட்சியமளித்ததாகத் தெரிகின்றது. கமிஷனின் தலைவராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. என். என். இராஜதுரையும் காரியதரிசியாக யாழ்ப்பாணம் உள்ளூராட்சி இலாகா விசாரணை உத்தியோகத்தர் ஜனப் எம். ஏ. அப்துல்மஜீதும் கடமையாற்றினர். (நி)

## குழந்தையை காப்பாற்ற கிணற்றுள் குதித்தார்

கோப்பாய், வியாழன்

தனது இருவயது நிரம்பாத குழந்தை தவறுதலாக கிணற்றுள் விழுந்து அழும் குரலைக்கேட்ட தாய் ஓடோடியும்வந்து குழந்தையின் உயிரைக் காப்பற்றுவதற்காக கிணற்றுள் குதித்தார்

இத்துணிகரச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கோப்பாய் தெற்கில் நடைபெற்றது. திருமதி. கந்தசாமி விசாலாட்சி என்பவரே பிரஸ்தாப தாயாரவா.

கிணற்றில் விழுந்ததாயினதும்குழந்தையினதும் அலறலைக்கேட்ட அயலவர்கள் ஓடிவந்து உயிருக்காகப் போராடும் அவர்களிருவரையும் மயிரிழையில் காப்பாற்றினர்.

## மீண்டும் வேலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் பிரதிநிதிகள் உற்பத்தியாளர் சங்கக் காரியதரிசியுடனும் மற்றும் தொழில்நிலைய உரிமையாளருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இணுவிலிலுள்ள சுருட்டுத் தொழில் நிலையமொன்றில் சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தம்செய்து வந்த தொழிலாளர்களில் சிலர் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக தொழிலாளர் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

## தமிழ் பேசும் . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டத்தில் திரு. ஸி. சுந்தரலிங்கம் தலைமையில் ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியினரின் கூட்டமொன்று நடைபெற்றது. அப்போது திரு. ஸி. சுந்தரலிங்கம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. சுந்தரலிங்கம் இக்கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய சூழ்நிலையில், ஈழத் தமிழ்பேசும் மக்கள் எந்தவிதமான ஆட்சியை விரும்புகிருர்கள் என்பதை அறிந்து கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும். இவ்விடயத்துக்கு எந்த ஒரு கட்சியும் பதில் கூறிவிடமுடியாது. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடிய உரிமை தமிழ்பேசும் மக்களுக்குத்தான் உண்டு. இந்த முடிவில்தான் தமிழ் பேசும் மக்களின் வாழ்வும் தாழ்வும் இருக்கிறது.

இதற்கான பதிலை மக்களிடமிருந்து வாக்கெடுப்பொன்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். இதற்கான ஒழுங்கை நானே ஏற்றுக்கொள்வேன். விரைவில் அதாவது பொதுத் தேர்தலுக்கு முன்னர் இந்த வாக்கெடுப்பை நடாத்துவதற்கு ஒழுங்குகளைச்செய்வேன்.

## வடமராட்சிக்கு பெண் ஜே. பி.

### மாதர்மன்ற கோரிக்கை

உடுப்பிட்டி, சனி

உலகம் பெண்களுக்கு முதலிடம் கொடுத்துவரும் இக்காலத்தில் ஈழத்துப் பென்குலத்துக்கு ஓர்பெரும் குறையுண்டு.

ஈழத்துப் பெண்களில் ஒருவருக்காவது சமாதான நீதிபதிப் பட்டம் வழங்காதது பெருங்குறையாகும். இப்பதவிக்குத் திறமைமிக்க பெண்கள் ஈழத்தில் இல்லையா? எத்தனையோ திறமை வாய்ந்த பெண்கள் குடத்திலிட்ட விளக்குப்போல் வெளியுலகு அறியாமல் இருக்கிருர்கள். பலபெண்களும் மாணவிகளும் கையெழுத்து வாங்குவதற்காக ஆண் ஜே. பிக்களிடமே செல்லவேண்டியுள்ளது. ஒருபெண் ஜே. பி. யாகவிருந்தால் மாணவிகளுக்கு மிக வசதியாகவிருக்கும்இது விஷயத்தில் நமது முயற்சிமேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வடமராட்சி மாதர்கலாமன்றச் செயலாலர் திருமதி விஜயலட்சுமி குலத்துங்கம் உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரத்திடமும் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்திடமும் கோரியுள்ளார். தமது மகஜரில் குடுப்பிட்ட பெண்மணியைவடமராட்சிப் பகுதிக்கு ஜே. பி. யாக நியமிக்க ஆவன செய்யும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' 1-1-68 இதழில், வழக்கம் போல் 1968-ம் வருட 'ஈழநாடு பஞ்சாங்கம்' இணைக்கப்பட்டிருக்கும்.

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனை ஏஜண்டுகள், 27-12-67க்கு முன்னதாக எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்பாணம்.

# யாழ். மாவட்ட துறைமுக தொழிலாளரின்புதியசாதனை

காங்கேசன்துறை, ஞாயிறு

யாழ்மாவட்டத் துறைமுகத் தொழிலாளர் யாழ்ப்பாணம் துறைமுகத்தில் புதிய சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் துறைமுகத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலிருக்கும் கபேரு என்னும் அரிசிக் கப்பலில் ஒரு தினத்தில் 8 மணிநேரம் 1,081 தொன் நிறையுள்ள 10,710 மூடைகளைக் கொண்ட அரிசியை யாழ் மாவட்டத் துறைமுகத் தொழிலாளர்சமாசம் இறக்கியுள்ளது,

இதுவே யாழ்ப்பாணத் துறைமுகத்தில் முதன்முதலாக இறக்கிய கூடுதல் தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 15-ம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்த இக்கப்பல் யாழ்ப்பாணம் செல்லதிசை தெரியாது இரண்டு நாட்களாக இங்கு தங்கிறது. பின்னர் யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஜெயக்கோ கப்பல் கம்பனி உரிமையாளர் திரு. ஜெயபாலசிங்கம் ஆகியோர் ஊர்காவற்றுறை கடற்படை கமாண்டர் திரு. முல்லருடன் தொடர்புகொண்டு அதன் பின்பு கடற்படை கப்பல் வழிகாட்ட இக்கப்பல் யாழ்பாணத் துறைமுகத்தில் மூன்ரும்நாள் நங்கூரமிட்டது.

இக்கப்பலின் இறக்குமதி வேலைகளை யாழ் மாவட்டத்தை அடங்கிய சுமார் 700 தொழிலாளர்கள் இன்னும் மூன்று நாட்களில் செய்து முடிப்பரென எதிர்பார்க்கப்படுகிறது.

## கத்தி வெட்டு இருவர்ஆஸ்பத்திரியில் அனுமதி

அளவெட்டி, ஞாயிறு

ஒழுங்கையால் சென்றவருக்கு எதிர்பாராத கத்தி வெட்டு அவர் தம்பிக்கும் கத்திவெட்டு.

தெல்லிப்பழையை அடுத்த வறுத்தலைவிளானைச் சேர்ந்த வி.செல்லன் ஒழுங்கையால் சென்று கொண்டிருக்கும் போது அதே ஊரைச் சேர்ந்த முருகன் நாகன் என்பவர் பாளைக்கத்தியால் வெட்டியாதாகவும் தம்பியாகிய வி. இளையதம்பிக்கும் கத்தியால் வெட்டிப்படுகாயப்படுத்தியதாகவும் காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

செல்லனும் இளையதம்பியும் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். சந்தேகநபரை பொலிசார் தேடுகின்றனர். புலன் விசாரணை தொடர்கிறது.

## கண்டெடுக்கப்பட்ட கூப்பன்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

திரு. ரி. சுப்பிரமணியம் என்பவரினல் கண்டெடுக்கப்பட்ட கூப்பன்கள் ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## இடமாற்றம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை தபால் நிலைய அதிபர் திரு. வி. சிவஞானம் மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு முருங்கன் தபால் நிலைய அதிபர் திரு. தம்பிப்பிள்ளை ஜனவரி மாதம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சிறுகதைப் போட்டி முடிவுகள

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். இலக்கிய நண்பர் கழகம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு!

முதற்பரிசு: க. நடேசன் [தெணியான்], இரண்டாவது பரிசு: நா. கருணநிதி (கலியுகன்), மூன்ருவது பரிசு: செல்வி யோகேஸ்வரி சின்னத்துரை,

மு. திருநாவுக்கரசு, ஆ. விவேகானந்தன், கு. அரவிந்தன் ஆகியோரது கதைகள் பாராட்டுப் பெற்றுள்ளன. பரிசுகள் அடுத்த மாதம் 2-ந் திகதி மல்லாகம் அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் வைத்து வழங்கப் படவிருக்கின்றன. திரு. நா. சண்முகநாதன் [யாழ்வாணன்] திரு. இ. நாகராஜன், திரு. அ. செ. முருகானந்தம் ஆகியோர் கதைகளைப் பரிசீலனை செய்தனர். [நி]

## பருத்தித்துறை...

[1-ம் பக்க தொடர்ச்சி)

விட்டனர். வடமராட்சியிலிருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளும இந்த வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் நடைபெற்றுவந்த குறுகிய சேவைகளும், நேற்றுக்காலை நடைபெறவில்லை. பருத்தித்துறை செல்வதற்காக நேற்றுகாலை யாழ்ப்பாண பஸ் நிலையத்தில், அதிகமானேர் காத்திருந்தனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 25 ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org